**செய்தி வெளியீடு எண் : 1441** **நாள்:28.12.2021**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 2021-2022 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கீழ்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

> "தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும், இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக ரூ.1.53 கோடி செலவில் உயர்த்தி வழங்கப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சாந்தவர்களுக்கும், இதுவரை வழங்கப்பட்டுவந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்படுவது போல உயர்த்தி வழங்கி அரசாணை (நிலை) எண். 108, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந6) துறை, நாள்.23.12.2021-இல் ஆணை வெளியிடப்பட்டது.

.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**